<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

OS.NO.76/2017 AND OS.NO.75/2014

P.W.1-VISWANATHAN, S/O.SUBRAMANI

DATE:17.11.2022

<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>

நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சொத்து விவரத்தில் எ அட்டவணை சொத்தில் அயிட்டம் நம்பர் 1 மற்றும் அயிட்டம் நம்பர் 2ல் 2 செண்ட், அயிட்டம் நம்பர் 3 ஆகியவை முதல் பிரதிவாதியாகிய என் அப்பாவின் பாகப்பிரிவினை மூலம் வந்த அவரின் தனிப்பட்ட சொத்து என்றாலும் அந்த சொத்தை என் அப்பா குடும்ப நலனுக்காகத்தான் விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. அது என் தாத்தா சொத்து. அந்த குறித்து நான் எந்தவித கேள்வியும் எழுப்ப முடியாது என்றாலும் எனக்கு எந்தவித அருகதையையும் கிடையாது என்றாலும் சரியல்ல. உள்ளது. எ அட்டவணை சொத்தில் விற்ற சொத்துக்கள் போக மீதி 18 செண்ட் உள்ளது என்றாலும் அதில் 2, 3 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு பாகப்பிரிவினை செய்வதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவாவில் எனக்கு எவ்வளவு பாகம் வேண்டுமென்று கேட்டுள்ளேன் என்றால் 1/3ல் பாகம் கேட்டுள்ளேன். நான் கேட்டுள்ள பாகம் தவறு என்றாலும் 1/5 பாகம் மட்டும் தான் எனக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என் தங்கை என்னிடம் சொத்தில் பாகம் எதுவும் கேட்க மாட்டேன் என்று விடுதலை பத்திரம் எதுவும் எழுதிக்கொடுத்துள்ளரா என்றால் இல்லை. ஆனால் வாய்மொழியாக சொல்லியுள்ளார். நான் வாய்மொழியாக சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருத்தப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டப்படி மகன், மகள் ஆகியோர்களுக்கு சம பாகம் உள்ளது என்றால் சரியல்ல. நான் அசல் வழக்கு எண்.481/2009 என்ற வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேலூரில் ஒரு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்தேன் என்றால் அனைவரின் மேலும் தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து 3வது பிரதிவாதி பெயரில் உள்ள சொத்து மட்டும் தான் என்றால் சரிதான். அந்த வழக்கில் உள்ள தாவா சொத்து பாகப்பிரிவினைக்குட்பட்டது அல்ல என்று வழக்கு தள்ளுப்படி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள மணி ஆர்டர்கள் வா.சா.ஆ.22 மற்றும் 23 வரிசைகள் உள்ள ஆவணங்களை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கிலும் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் மணி ஆர்டர் மூலம் அனுப்பிய பணத்தை கொண்டு தான் 3வது பிரதிவாதி பெயரில் அந்த சொத்து வாங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் என் பெயரில் எத்தனை சொத்து வாங்கியுள்ளேன் என்றால் என் பெயரில் சொத்து வாங்கவில்லை. மாவட்ட உரிமையியல்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் ஆட்டோ நகரில் ஒரு சொத்து என் பெயரில் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவி அவரின் தாய் வீட்டில் கொடுத்த பணத்தை வைத்து அந்த சொத்து வாங்கினார். அதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது என் மனைவியின் சொத்து என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை. என் தயார் பி அட்டவணை சொத்தில் வீடு கட்டியதாக சொல்லியுள்ளது குறித்து அந்த வீட்டை எந்த வங்கியிலிருந்து கடன் பெற்று கட்டினார் என்றால் வேலூர் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்று கட்டினார். அந்த கடனுக்கான தொகைகளை என் தாயார் பெயரில் தான் செலுத்தியுள்ளோம் என்றால் ஆமாம். நானும் செலுத்தியுள்ளேன். எல்லா ரசீதுகளிலும் என் தாயார் மற்றும் தந்தை பெயர் தான் உள்ளது என்றால் சரிதான். நான் நேரடியாக வங்கியில் பணம் செலுத்தியதற்கு என்னிடம் ரசீது எதுவும் இல்லை என்றால் என் அப்பா பெயரில் கட்டியதற்கான ரசீதுகள் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.23ல் மொத்த தொகை எவ்வளவு இருக்கும் என்றால் பார்த்தால் தான் தெரியும். மணி ஆர்டர் மூலம் நான் ரூ.200/-, ரூ.300/- அதிகபட்சமாக ரூ.1,000/- வரை தான் அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அதிகபட்சமாக ரூ.10,000/- வரை அனுப்பியுள்ளேன். நான் அனுப்பிய மணி ஆர்டர் தொகைகளுக்கும் பி அட்டவணையில் கட்டியுள்ள வீட்டிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பந்தம் உள்ளது. நான் வனநகர் உமாபதி என்பவர் வீட்டில் எவ்வளவு காலம் வாடகைக்கு இருந்தேன் என்றால் வாடகைக்கே இல்லை. என் வீட்டில் தான் இருந்தேன். 2004லிருந்து இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு சில காலம் முன்பு வரை வனநகர் உமாபதி என்பவர் வீட்டில் வாடகைக்கு தான் இருந்தேன் என்றாலும் இந்த வழக்கிற்காக அவ்வாறு இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.23 ஆவணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரூ.50,000/- கடன் பெறுவதற்காக கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின் சான்றிட்ட நகலை எதற்காக தாக்கல் செய்துள்னே் என்றால் 22.02.2002ல் 14 1/2 சென்ட் நிலம் என் அம்மா வாங்குவதற்காக ஆவண செலவிற்காக ரூ.50,000/- (PF LOAN)கடன் பெற்று கொடுத்தேன். அந்த கடன் விண்ணப்பத்தில் என் தாயார் பெயரில் சொத்து வாங்குவதற்காக கடன் தேவைப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பிட்டால் லோன் கொடுக்கமாட்டார்கள் என்பதால் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.23 ஆவணத்தில் 18.11.2002, 31.03.2003, 14.02.2003 ஆகிய தேதியிட்ட கூட்டுறவு வங்கியில் கொடுத்த ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அந்த ரசீதுகள் என் தாயார் பெயரில் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரசீதுகளில் செலுத்துபவர் என்ற இடத்தில் என் தகப்பனார் தான் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். என் தாயார் மாடு வைத்துக்கொண்டு வியாபாரம் செய்து வந்தார் என்றாலும் அந்த வியாபாரத்தில் வந்த வருமானத்தில் தான் பி அட்டவணை சொத்தில் உள்ள வீட்டை கட்டினார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தை அவரிடமிருந்த நகைகள் மற்றும் சீதனத்தை விற்று தான் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கு சில காலம் முன்பு தான் சட்டத்திற்கு புரம்பாக தாவா பி அட்டவணை சொத்தில் உள்ள கதவு எண்.2/47சி என்ற வீட்டுக்குள் நுழைந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த வீட்டில் தான் முதலிருந்தே வசித்து வருகிறேன். என் தாயார் என் தம்பிக்கு வா.சா.ஆ.7 முன்னிலைக்கு செட்டில்மண்ட் எழுதி வைத்ததற்கு பின்பு தான் இந்த

வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்தபிறகு இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு செட்டில்மன்ட் எழுதி வைத்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா தாக்கல் செய்வதற்கு முன்னர் அந்த வீட்டிலிருந்து என்னை காலி செய்ய சொன்னப்பிறகு தான் செட்டில்மண்ட் எழுதி வைத்தது பற்றி எனக்கு தெரியவந்தது. அந்த வீட்டை காலி செய்ய சொன்னது என் தாயாரும் என் தம்பியும் என்றால் சரிதான். என் தாயார் 1973ல் நவாப் ஜான் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தில் தான் 2/47சி என்ற வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாயார் ஜகதாம்பாள் வாங்கிய சொத்தில் பாதியிலும் நடராஜன் வாங்கிய சொத்தில் பாதியிலும் அந்த வீடு கட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஆவணம் தான் என் தம்பிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மண்ட் ஆவணம் என்றால் சரிதான். அதில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 343/1எ குறிப்பிடப்பட்டுள்ளது. கதவு எண் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2/47சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஆவணத்தில் பக்கம் 2ல் நான் சுயார்ஜிதமாக கிரையம் பெற்று என்று வாசகங்கள் உள்ளது என்றால் ஆவணத்தில் உள்ளது, ஆனால் அது தவறு. 4ஆம் பிரதிவாதிக்கும் வா.சா.ஆ.7 தேதியிலேயே ஒரு செட்டில்மண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் தான் வா.சா.ஆ.8 என்றால் சரிதான். அதில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 343/1பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் பக்கம் 2ல் நான் சுயார்ஜிதமாக 11.12.2002 தேதியில் கிரையம் பெற்று என்று வாசகங்கள் உள்ளது என்றால் ஆவணத்தில் உள்ளது, ஆனால் அது தவறு. வா.சா.ஆ.3 மற்றும் 6 ஆவணங்களின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என் அம்மாவிடம் தான் இருந்தது, தற்போது யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. 2009ல் என் தாயார் செட்டில்மண்ட் எழுதி வைத்த தேதியில் 3, 4 பிரதிவாதிகளிடம் அசல் ஆவணங்களை கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 மற்றும் 8யை ரத்து செய்வதற்கு எந்த வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் இந்த வழக்கில் வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்களை ரத்து செய்ய வேண்டுமென்று எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. ரத்து செய்ய வேண்டுமென்று கோரியுள்ளேன். தாவா பி அட்டவணை 2வது பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றாலும் அதனால் அவர் வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்கள் மூலம் செட்டில்மண்ட் எழுதி வைத்துள்ளதால் அந்த சொத்துக்களில் பாகம் கேட்க எனக்கு எந்த அருகதையும் உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பாகம் உள்ளது. 3வது பிரதிவாதி முருகன் அசல் வழக்கு எண்.75/2014 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு இந்த வழக்குடன் சேர்ந்து நடக்கிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் உள்ள சொத்தின் சர்வே எண்.343/1எ1 என்றால் சரிதான். அந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து என்னுடைய தாயார் வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் எழுதி வைத்த சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் அவருக்கு உரிமம் வந்துள்ளது என்றால் சரியல்ல. உரிமம் வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வீட்டின் வீட்டு வரி 3வது பிரதிவாதி முருகன் பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான். அவர் பெயருக்கு வீட்டு வரி மாற்றம்

செய்யப்பட்டபோது நான் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆட்சேபனை தெரிவித்துள்ளேன். அந்த சொத்தின் பட்டாவும் 3வது பிரதிவாதி பெயருக்கு மாறியுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதற்கு நான் ஆட்சேபனை தெரிவித்துள்ளேன். எனவே வா.சா.ஆ.7 ஆவணப்படி சொத்து 3வது பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் அதனால் அசல் வழக்கு எண்.75/2014 தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல. அது தனிப்பட்ட சொத்து அல்ல. விற்ற சொத்துகள் போக மீதியுள்ள சொத்தில் 1/5 பாகம் கொடுக்க பிரதிவாதிகள் 2, 3, 9க்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும் தாவா பி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்துகள் வா.சா.ஆ.3, 6 ஆவணங்களின் அடிப்படையில் என் தாயார் தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. அது குடும்ப சொத்து. நான் பணம் கொடுத்துள்ளேன். அந்த சொத்துகளுக்கு வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்களன் அடிப்படையில் செட்டில்மண்ட் எழுதி வைத்துள்ளதால் இந்த வழக்கு பி அட்டவணை பொருத்து தள்ளுப்படி செய்யப்பட வேண்டுமென்றாலும் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தின் விவரங்கள் சரியாக இல்லாததால் தள்ளுப்படி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டி சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

P REVATHY Digitally signed by P REVATHY

கூடுதல் மாவட்ட நீதிபதி,

(விரைவு நீதிமன்றம்),

வேலூர்.